# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2053 ● மே 28, 2022 Weekly E-paper ● May 28, 2022




## வரலாற்றில் உயர்ந்த ஸ்டாலின்! வாய்ப்பைத் தவறவிட்ட மோடி!

சுப.வீரபாண்டியன்

### தில்லையில் ஆடுவது நடராசரா? தீட்சிதர்களா?

வெற்றிச்செல்வன்

### அதே கோயில்! அதே பெண்கள்!

தலையங்கம்

### நெஞ்சுக்கு நீதி -“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்”

மதிவாணன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2053 ● மே 28, 2022 Weekly E-paper ● May 28, 2022


# வரலாற்றில் உயர்ந்த ஸ்டாலின்! வாய்ப்பைத் தவறவிட்ட மோடி!

சுப.வீரபாண்டியன்

திரைப்படத்தில்தான் நகைச்சுவை நடிகர்கள் இருப்பார்கள், இப்போது அரசியலிலும் வந்து விட்டார்கள் என்று நான் சொன்னவுடன், 'பாவம் அண்ணாமலையைத் தாக்காதீர்கள்' என்கிறார் பக்கத்தில் உள்ள ஒருவர்! நகைச்சுவை நடிகர் என்றாலே அது அண்ணாமலைதான் என்று ஆகிவிட்டது.

இரண்டு நாள்களுக்கு முன் பிரதமரும், முதலமைச்சரும் கலந்து கொண்ட கூட்டம் பற்றி அண்ணாமலை கூறியிருப்பது மீண்டும் அவர் நிலையை உறுதி செய்கிறது. முதலமைச்சர் பெயரைச் சொன்னதும் கைதட்டல் வானைப் பிளக்கிறது, பிரதமர் பெயரைச் சொல்லும்போது அவ்வளவு கையொலி இல்லை, இதுவெல்லாம் திட்டமிட்ட சதி என்கிறார் அண்ணாமலை!

அன்று நடந்தது சதியன்று. மாபெரும் தலைவனொருவனின் அரசியல் நாகரிக அரங்கேற்றம்.பிரதமருக்குக் கொடுக்க வேண்டிய மதிப்பில் சற்றும் குறையாமல், மிகுந்த பண்போடு அவரை வரவேற்று மேடைக்கு அழைத்துவந்து, மேடை ஏறும்போதும், அவருக்குப் பின்னால் அடக்கமாக நடந்துவந்து, நம் முதலமைச்சர் தான் மிக நாகரிகமானவன் என்பதை மெய்ப்பித்தார்!

> “பிரதமர் மோடி சில கோரிக்கைகளை, குறிப்பாக நீட் தேர்வு விலக்கு போன்றவற்றை ஏற்று மேடையிலேயே அறிவித்திருந்தால், முதலமைச்சருக்குக் கிடைத்ததை விடக் கூடுதல் கையொலிகளை அவர் பெற்றிருக்கலாம். அண்ணாமலையும் அகமகிழ்ந்திருப்பார்”



ஆனால் பேசும்போது, இவ்வளவு கோரிக்கைகளை வைத்ததும், திராவிட மாடல் என்று கூறியதும்தான் பாஜகவினரைக் கோபம் கொள்ள வைத்துள்ளது. ஒரு பிரதமர் ஒரு மாநிலத்தின் விழாவிற்கு வரும்போது, அவர் முன்னிலையில், தங்களின் தேவைகளை எடுத்துக் கூறுவதுதான் நல்ல முதலமைச்சருக்கு அழகு! அதனைத்தான் தமிழ்நாடு முதல்வரும் செய்துள்ளார்.

இதற்கு முன்பும் இப்படிப்பட்ட நிகழ்வுகள் பல நடந்துள்ளன. காமராஜர், அண்ணா, கலைஞர், எம்ஜிஆர் என்று எல்லா முதல்வர்களும் பிரதமர் முன் கோரிக்கைகளை வைத்துள்ளனர். ஏன், ஜெயலலிதா கூட அப்படி ஒருமுறை வேண்டுகோள் வைத்துள்ளார். தில்லியில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் வெளிநடப்பே செய்துள்ளார்.

1955ஆம் ஆண்டு சென்னை வந்த பிரதமர் நேரு கலந்துகொண்ட மேடையில் காமராஜர் வைத்த கோரிக்கைதான் நெய்வேலி நிலக்கரியைத் தோண்டியெடுக்கும் திட்டம்.

முதலமைச்சர்கள் வைக்கும் கோரிக்கைகளில் நியாயமானவற்றை அங்கேயே ஏற்று பிரதமர் அறிவிப்பு செய்தால் அது இருவருக்கும் பெருமை தரும்! அவ்வாறு நேற்று பிரதமர் மோடி சில கோரிக்கைகளை, குறிப்பாக நீட் தேர்வு விலக்கு போன்றவற்றை ஏற்று மேடையிலேயே அறிவித்திருந்தால், முதலமைச்சருக்குக் கிடைத்ததை விடக் கூடுதல் கையொலிகளை அவர் பெற்றிருக்கலாம். அண்ணாமலையும் அகமகிழ்ந்திருப்பார்!

வைக்க வேண்டிய கோரிக்கைகளை வைக்க வேண்டிய இடத்தில் வைத்து, வரலாற்றில் உயர்ந்திருக்கிறார் ஸ்டாலின். வந்த நல்வாய்ப்பைத் தவறவிட்டுவிட்டுத் தில்லி திரும்பியிருக்கிறார் மோடி! ●


# தில்லையில் ஆடுவது நடராசரா? தீட்சிதர்களா?

**வெற்றிச்செல்வன்**

அண்மையில் நடைபெற்ற இருவேறு நிகழ்வுகள், தமிழ்நாட்டில் மதத்தை மையமாக வைத்து எப்படியாவது அரசியல் செய்துவிட வேண்டும் என்ற முனைப்புடன் மதவாத சக்திகள் இயங்கி வருவதை வெளிப்படுத்துகின்றன.

கடந்த 17.05.2022 அன்று, சிதம்பரம் நடராசர் கோயிலில் சிற்றம்பல மேடை ஏறி, பக்தர்கள் வழிபாடு செய்யலாம் என்ற ஆணையை வெளியிட்டுள்ளது தமிழ்நாடு அரசு. இப்படி ஓர் ஆணையை அரசு ஏன் வெளியிட வேண்டும் ?

நடராசர் கோயிலில் சிற்றம்பல மேடையில் ஏறி மக்கள் வழிபாடு செய்வது நடைமுறையில் இருந்த ஒன்றுதான். ஆனால், கொரோனா பெருந்தொற்று காரணமாக சமூக இடைவெளியுடன் வழிபாடு செய்ய சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. எனவே சிற்றம்பல மேடை ஏறி வழிபாடு செய்வது நிறுத்தி வைக்கப்பட்டது.



சுருக்கம்

இந்து சமய அறநிலையத்துறை – கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம் மற்றும் நகர் அருள்மிகு சபாநாயகர் (நடராஜர்) திருக்கோயில் – கனகசபை மண்டபத்தின் மீதேறி அருள்மிகு சபாநாயகரை பக்தர்கள் தரிசனம் செய்திட அனுமதி வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அநி 3-2) துறை

அரசாணை (நிலை) எண். 115

நாள்:17.05.2022.
சுபகிருது வருடம், வைகாசி-03,
திருவள்ளுவராண்டு 2053

படிக்கப்பட்டது:-

இந்து சமய அறநிலையத்துறை ஆணையரின் கடித ந.க.எண் 20049/2022/எச்3/ நாள்.25.04.2022.

--------

ஆணை:-

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர், கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம் மற்றும் நகரில் உள்ள அருள்மிகு சபாநாயகர் (நடராஜர்) திருக்கோயிலில் உள்ள கனகசபை மண்டபத்தின் மீதேறி குறைந்த இடைவெளியில் அருள்மிகு சபாநாயகரை தரிசனம் செய்ய அனுமதிக்கக் கோரி திரு.எம்.என்.ராதா கிருஷ்ணன் என்பவரால் சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடரப்பட்ட W.P.9447/2022 வழக்கில், 20.04.2022 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவில், பக்தர்களை அனுமதிப்பது தொடர்பாக, கோவிட் – 19 தற்போதைய நிலை மற்றும் இதர காரணங்களையும் மாவட்ட ஆட்சியர், இந்து சமய அறநிலையத்துறை மற்றும் கோயில் நிர்வாகத்தினர் ஆலோசித்து முடிவு செய்ய ...

தொற்று குறைந்த நிலையில், வழக்கமான வழிபாட்டு முறைகள் பின்பற்றப்பட்டன. எனினும் சிற்றம்பல மேடை ஏறி மக்கள் வழிபடுவதை நடராசர் கோயிலின் தீட்சிதர்கள் அனுமதிக்கவில்லை. கடந்த பிப்ரவரி மாதம், ஜெயசீலா என்ற பெண் சிற்றம்பல மேடை ஏற முயன்றபோது, அவர் தீட்சிதர்களால் தடுக்கப்பட்டு வெளியே தள்ளப்பட்டார். இதனையடுத்து, சிற்றம்பல மேடை ஏறி யாரும் வழிபடக் கூடாது என்று தீட்சிதர்கள் தீர்மானம் நிறைவேற்றினர்.



இந்நிகழ்வைத் தொடர்ந்தே, தமிழ்நாடு அரசு தொன்றுதொட்டு நடைமுறையில் இருந்து வந்த பழக்க வழக்கத்தின்படியும், பக்தர்களின் கோரிக்கையைக் கருத்தில் கொண்டும் சிற்றம்பல மேடை ஏறி வழிபடுவதற்கான ஆணையைப் பிறப்பித்தது.

அரசின் ஆணையை அடுத்து, 23.05.2022 அன்று மக்கள் சிற்றம்பல மேடையில் ஏறி வழிபாடு நடத்தினர். தங்கள் அதிகாரம் செல்லுபடியாகாததைக் கண்டு பொறுப்பார்களா தீட்சிதர்கள் ? தமிழ்நாடு அரசின் இந்த நடவடிக்கையைக் கண்டித்து, பிரதமருக்கும், குடியரசுத் தலைவருக்கும் கடிதம் எழுதியுள்ளனர், தில்லைக் கோயிலில் தமிழில் பாட அனுமதிக்காத இந்தத் தீட்சிதர்கள்.

அறநிலையத் துறை ஏன் அரசின் கையில் இருக்க வேண்டும் என்பதை, அரசு கோயிலை விட்டு வெளியேற வேண்டும் என்று பேசித் திரியும் அறிவு ஜீவிகள் இப்போதேனும் உணர்வார்களா தெரியவில்லை. சிதம்பரம் கோயில் மறுபடியும் அரசின் கட்டுப்பாட்டிற்கு வந்தால் மட்டுமே இத்தகைய நிகழ்வுகள் நடைபெறாது தடுக்க முடியும்.

2018 ஆம் ஆண்டு திராவிட இயக்கத் தமிழர் பேரவை நடத்திய சமூக நீதி மாநாட்டின் முதல் தீர்மானமே அறநிலையத்துறை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதும், தில்லைக் கோயில் மீட்டெடுக்கப்பட வேண்டும் என்பதும்தான். அத்தீர்மானம் பின்வருமாறு:

"நீதிக் கட்சி ஆட்சியில் உருவாக்கப்பட்ட இந்து சமய அறநிலையத் துறையைக் கலைப்பதற்கான பெருமுயற்சி ஒன்று, தன்னலம் மிக்க கூட்டம் ஒன்றினால் இப்போது தொடங்கப்பட்டுள்ளது. இந்துக் கோயில்களை இந்துக்களிடம் கொடுத்து விடுங்கள் என்பதாக அக்கோரிக்கை முன்வைக்கப்பட்டாலும், அதில் எள்ளளவும் உண்மையில்லை. இந்துக்கள் என்னும் பெயரில், வெறும் மூன்று விழுக்காடு மட்டுமே உள்ள ஒரு குறிப்பிட்ட சாதியினர், மொத்தக் கோயில் சொத்துக்களையும் தாங்கள் மட்டும் அபகரித்துக் கொள்வதற்கான திட்டமே இது. எனவே தங்களை இந்துக்கள் என்று எண்ணிக் கொண்டிருக்கும் கோடிக்கணக்கான வெகுமக்களின் சொத்துகளைப் பாதுகாக்கும் கடமை, கடவுள் நம்பிக்கை உடையவர்களுக்கு மட்டுமின்றிப் பகுத்தறிவாளர்களுக்கும் உள்ளது.

ஆதலால், எக்காரணம் கொண்டும் இந்து அறநிலையத் துறை கலைக்கப்படக் கூடாது என்று இம்மாநாடு வலியுறுத்துவதுடன், தில்லை நடராசர் கோயிலையும், தீட்சிதர்களிடமிருந்து மீண்டும் அரசு மீட்டெடுக்க வேண்டும்".

மதத்தை வைத்து அரசியல் செய்யப்படும் மற்றொரு நிகழ்வும் தில்லை நடராசர் தொடர்புடையதே. நடராசரை ஆபாசமாகச் சித்தரித்ததற்காக U2 Brutus என்னும் Youtube வலைதளத்தில் காணொலி பதிவிட்ட மைனர் என்பவரக் கைது செய்ய வேண்டும் என்று சிதம்பரத்தில் சிவனடியார்கள் (?) 23.05.2022 அன்று ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கிறார்கள்.

தில்லையில் ஆடுவது நடராசரா, இல்லை தீட்சிதர்களா? புரியவில்லை.

இந்துமதப் புராணங்களே ஆபாசக் கதைகளின் மொத்த உற்பத்திக் களம்தானே. பிள்ளையார் பிறந்த கதையையும், இராமன் பிறந்த கதையையும் நம் வீட்டுப் பிள்ளைகளுக்குச் சொல்லித்தர முடியுமா ? எனவே எதனைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்த வேண்டுமோ, எதனைத் தீயிட்டுக் கொளுத்த வேண்டுமோ அதனைச் செய்யாமல், அக்கதைகளை மக்களுக்குச் சொல்பவர்களை நொந்து என்ன பயன் ?

"சுயமரியாதைக்காரர்கள் புராணக் குப்பைகளைக் கிளறிக்கிளறி வெறும் ஆபாசங்களைப் பேசுகின்றார்கள், எழுதுகின்றார்கள்" என்று பேசுகின்றீர்கள். எங்கள்மீது சில சமயத்தில் வெறுப்பும் கொள்ளுகின்றீர்கள்.

ஆனால் இந்தக் கோவில்களுக்குப்போய், தேங்காய் பழம் உடைத்து வைத்து காசும் கொடுத்து இந்த உருவங்களைப் பார்க்க வந்துகொண்டிருப்பவர்கள் மனிதர்களா? என்பதைப் பற்றி நீங்கள் சிறிதுகூட சிந்திப்பதில்லை" (குடிஅரசு, 01.02.1931) என்றாரே தந்தை பெரியார். அந்த நிலைமை இன்னும் தொடர்கிறதா இல்லையா ? எனவே "மதம், சாமி, கோவில் என்றால் முட்டாள்தனம், அயோக்கியத்தனம், ஆபாசம் என்றுதான் சொல்ல வேண்டியிருக்கின்றது. வருத்தப்பட்டுப் பயனில்லை, வெட்கப்பட வேண்டும். அப்போதுதான் அறிவு, ஒழுக்கம், நாகரிகம் விளங்கும்" என்ற பெரியாரின் கொள்கையை இன்னும் வீரியத்துடன் கொண்டு செல்ல வேண்டிய தேவை இருக்கிறதா இல்லையா ?

எனவே மதத்தை முன்வைத்துத் தீவிரமாக வெறுப்பரசியல் செய்யப்பட்டு வரும் இந்நாட்களில், பெரியாரிய இயக்கங்கள் மத ஒழிப்புப் பிரச்சாரத்தைத் தீவிரப்படுத்துவதே மக்களுக்கு விழிப்புணர்வை ஊட்டும். மத அரசியல் செய்பவர்களிடமிருந்து மக்களைக் காக்கும்.

●

# கடவுள் மரணம், யார் காரணம்

## ஈரோடு தமிழன்பன்

மர்மமான முறையில்
கடவுள்
செத்துக் கிடப்பதாகத்
தகவல்.

நாத்திகர்கள் நடத்திய
வன்முறையாக இருக்குமோ?
விசாரித்த போது
இல்லாத கடவுளை
எப்படி நாங்கள் கொன்றிருக்க முடியும்?
என்று மறுத்துவிட்டனர்
நாத்திகர்கள்.

அர்ச்சகர்களாகத்
தங்களையும் அமர்த்த வேண்டும்
என்று
போராட்டம் நடத்திய கலகக்காரர்கள்
வேலையாக இருக்கலாம் ....
காவல் துறையின்
இரகசியக் கண்களில் சந்தேகம்.

தங்களிடமிருந்து கடவுள்
கை நழுவிப் போய்விடக் கூடாது
என்பதற்காகப்
புரோகிதர்களே இந்தப் பாதகத்தைப்
புரிந்திருக்க வேண்டும்
கலகக்காரர்கள்
விரல்கள் வேறுதிசை காட்டின.

ஆபரணங்கள்
உண்டியலை ஏன்
தன்னையே
கொள்ளை யடிக்க வந்தவர்களிடம்
எதிர்ப்பு காட்டியிருக்கலாம்
கைகலப்பில்
கடவுள் காலி செய்யப்பட்டிருக்கலாம்.

மோப்பத் துறை
துப்புக்கு அலைந்தது.

பகையான கடவுள்களின்
சதியா?
பத்திரிக்கை கபாலங்களில்
கசிந்தன யூகங்கள்.

மாற்றுக் கடவுள்களின்
அக்கிரமம் ஒழிக
மாற்றுக் கடவுள்களின்
அராஜகம் ஒழிக
மாற்றுக் கடவுள்களின்
அட்டூழியங்கள் ஒழிக.

மதங்கள்
கத்தி கடப்பாறைகளோடு
தெருக்களில் இறங்கின.

மக்கள் பிணங்கள் தெருக்களிலும்
கடவுள் பிணம் ஆலயத்திலும்
அழுகி நாறின.

கண்களில் எவருக்கும்
படாதபடி
கடவுள் எழுதிவைத்திருந்த
குறிப்பு
‘என்னையே எப்போதும்
நம்பியிருக்கும் மக்களை
என்னால் காப்பாற்ற முடியவில்லையே
என்னும் சுய சோகத்தில்
தற்கொலை செய்து கொண்டேன்.
என் சாவுக்கு எவரும் காரணம் இல்லை’.

(‘பெல்’ ராஜன் முகநூல் பக்கத்திலிருந்து

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## அதே கோயில்! அதே பெண்கள்

மாமல்லபுரம் தலசயனப் பெருமாள் கோயிலில் 21-05-2022 அன்று கோயில் நிர்வாகம் அன்னதானம் வழங்கி இருக்கிறது.

அப்போது அன்னதான உணவைச் சாப்பிட வந்த நரிக்குறவர் பெண்களைத் தரையில் அமர வைத்துச் சாப்பிடச் செய்திருக்கிறார்கள் கோயில் பொறுப்பாளர்கள்.



நரிக்குறவர்களும் மனிதர்கள் தானே! அவர்களைத் தரையில் உட்கார வைத்தும், மற்றவர்களை மேசை - நாற்காலிகளில் அமர வைத்தும் உயர்வு, தாழ்வு பாகுபாடு காட்டுவது என்ன நியாயம்? இது சமூக நீதிக்கு எதிரானது.

இச்செயலைக் கண்டித்துத் திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பாலாஜி அக்கோயிலின் பெண் செயல் அலுவலர் சிவசண்முகப் பொன்மணி, அக்கோயிலின் சமையலர் குமாரி ஆகிய இருவரையும் இடைநீக்கம் செய்துள்ளார்.

கடந்த ஆண்டு இதே கோயிலில் சாப்பிட வந்த ஒரு நரிக்குறவர் பெண்ணை கோயில் நிர்வாகிகள் அவமானப் படுத்தி வெளியேற்றியதையும், பின்னர் அப்பெண்ணைக் கழகத் தலைவர் ஸ்டாலின் அழைத்துப் பேசி ஆறுதல் கூறியதையும் இங்கே நினைத்துப் பார்க்க வேண்டும்.

நரிக்குறவர் சமூகம் நாடோடியாக, பின்தங்கிய சமூகமாக, கல்வியின் வாசலைக் கூடத் தொட முடியாத சமூகமாக இருந்து கொண்டு இருக்கிறது.

அந்தப் பாவப்பட்ட மக்களை, குறிப்பாக பெண்ணுரிமை பேசப்பட்டுக் கொண்டு இருக்கும் இந்தக் காலத்தில் அப்பெண்களுக்குத் தீண்டாமைச் சிந்தனையுடன் உணவு தானம் கொடுத்தது வேதனைக்கு உரியது.

கடவுளின் சந்நிதானம் என்று சொல்லிக் கொள்ளும் இந்துக் கோயில்கள் தோறும் இது போன்றத் தீண்டாமை வேறு வடிவங்களிலும் இருக்கத்தான் செய்கிறது.

அம்பாளும், லட்சுமியும், சரஸ்வதியும் பெண் கடவுள்கள் என்று சொல்லிக் கொண்டு, வாழும் பெண்களைத் தீட்டு என்று சொல்கிறது இந்து மதமும், கோயில்களும்.

இது என்ன நியாயம் ?

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

ஆசிரியர் குழு:
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120. என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,

தொலைபேசி: 044-2472 6408

# நெஞ்சுக்கு நீதி-“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்”

**மதிவாணன்**

கலைஞரின் சுயசரிதை ‘நெஞ்சுக்கு நீதி’ படத்தின் பெயர் என்றால் - திருவள்ளுவரின் வரிதான் பொருத்தமாக இருக்கும்.அது ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’.

தலைப்பில் மட்டும் அல்ல, படத்தின் மூலை முடுக்கில் எல்லாம் பொருள் பொதிந்த குறியீடுகளும் வசனங்களும் நிரம்பி வழிகின்றன. எந்த இடத்திலும் நெருடல் இல்லாமல் இயல்பாக இயக்கி இருக்கிறார் இயக்குநர் அருண்ராஜா. அமைதியாகவும் கதாபாத்திரத்தின் கனத்தை ஏற்றும் நடித்துள்ளார் உதயநிதி ஸ்டாலின்.

சுதந்திர தினம் அன்றும், சாதிக் கொடுமைக்கு விடுமுறையில்லை என்ற அழுத்தமான பதிவுடன் ஒரு பள்ளிக்கூட அங்கன்வாடியில் தொடங்குகிறது படம். மயானத்தில், நம்பள எரிக்கதான் விடுவாங்க, இங்க எரிய விடமாட்டாங்க என்ற வசனத்தில் சாதிக் கொடுமை செத்த பிறகும் தொடர்வதைக் காட்சிப்படுத்துகிறது.



வெளிநாட்டில் படித்தவராக, உள்ளூர் சாதியப் பிரச்சனைகள் குறித்து அறியாதவராக, நாயகன் வீரராகவன் IPS பொள்ளாச்சியின் இயற்கை அழகை இரசித்தப்படி, அதன் பின்னால் இருக்கும் சாதிக் கொடூரங்கள் அறியாமல் வரும் காவல்துறை ASP அதிகாரியாக அறிமுகமாகிறார் உதயநிதி ஸ்டாலின். ஊர் வந்துவிட்டது, பாரத ரத்னா அம்பேத்கர் சிலை தெரிகின்றது என்று அலைபேசியில் பேசும் நாயகனிடம், சிலை கூட்டுக்குள் இருக்கிறதா? வெளியே இருக்கிறதா? என்று கேட்கிறார் நாயகி தன்யா. வெளியே.. அப்படினா இன்னும் ஊர் வரவில்லை என்ற நாயகியின் பேச்சில் அழுத்தமான சமூகப் புரிதல் வெளிப்படுகின்றது.

இரண்டு பட்டியலின சிறுமிகள் கொலைப்பட்டு தூக்கில் தொங்கும் காட்சியில் இருந்து கதைக்களம் சூடுபிடிக்கிறது. மூன்றாவதாக ஒரு சிறுமியைக் காணவில்லை. மொத்த காவல்துறையும் வழக்கை ஆணவக்கொலை என்று முடிக்க எண்ணுகின்றது. சமூகத்தில் தேவையில்லாத பதட்டம் ஏற்படும் என்று நாயகனின் விசாரணைக்கு முட்டுக்கட்டை போடுகின்றது. உடற்கூறு ஆய்வில் பாலியல் குற்றத்தை மறைத்து மாற்றியமைத்தல், சிறுமியின் குடும்பத்தாரிடம் மிரட்டி வாக்குமூலம் வாங்கி, பிணத்தை எரியூட்டச் செய்தல் என மற்ற காவல்துறையினர் செய்கைக்கு நடுவே தனி ஆளாக வழக்கை முன்னோக்கி நகர்த்துகிறார் நாயகன்.

பொள்ளாச்சி பாலியல் குற்றத்தில் அமைச்சரின் அக்கா மகன் தொடர்பு, அரசியல் பின்புலம், சாதிய சமூக கட்டமைப்பு ஆகியவற்றிக்கு எதிராகப் போராடும் நாயகன் உதயநிதி, சாதிய பேதம் கொண்டு சமூகத்தில் பதட்டத்தை உருவாக்கியதாகக் கூறி இடைநீக்கம் செய்யப்படுகிறார். அதன்பின் குற்றவாளிகளுக்கு எதிரான ஆதாரத்தை திரட்டினாரா? மூன்றாவது சிறுமி சத்யாவை கண்டுபிடித்தாரா? என்பது தான் கதை.

பட்டியலின புரட்சிகர இளைஞனாக கருப்பு துண்டணிந்து பொங்கும் கோபத்துடன் வரும் ஆரி அர்ச்சுணன் பாத்திரம் என்றால், பட்டியலினத்தை சார்ந்த காவல்துறை அதிகாரி இளவரசனின் கையறு நிலை மறுபக்கம். ‘தீட்டு’ என்றால் என்ன என்று நாயகன் கேட்கும் காட்சி அருமை. நாய்களிடம் அன்புகாட்டும் காவல்துறை அதிகாரி, மனிதர்களை சாதி வெறியுடன் நடத்தும் காட்சி, காட்டுமிராண்டி சமூகத்திடம் இருந்து தப்பி ஓடிய சத்யா, ஊறும் பாம்பின் அருகே காட்டில் ஒரு மூலையில் மயங்கிக் கிடக்கும் காட்சி, சொல்லாமல் உணர்த்துவது சாதி வெறியர்களை விட இது பாதுகாப்பான இடம் தான் என்று.

அனிதா MBBS என்று உதயநிதி அழைக்கும் போதும், மருத்துவர் அனிதா வெள்ளை கோட்டுடன் வில்லன் முன் வரும் பொழுதும் அரங்கம் அதிர மக்கள் ஆரவாரம். வில்லன் சுரேஷ் அய்யரை பட்டியலின காவல் அதிகாரி அறைந்த காட்சியில் கைத்தட்டல் அள்ளுகிறது. தினமலரும், காயத்ரி ரகுராமும் ஏன் குமுறுகிறார்கள் என்று இதில் இருந்து புரியும்.

திபுனு தாம்ஸின் இசை மற்றும் தமிழரசனின் வசனம் கதைக்காகவே முழுமையாக அர்ப்பணிக்கப்பட்டுள்ளன என்று சொல்லலாம். எந்த இடத்திலும் நெருடலாக இல்லாமல் இயல்பாக அமைந்திருந்தது காட்சிகளும், கதையும். வசனங்கள் படத்திற்கு பெரும் பலமாக அமைந்ததுள்ளது. அவைகளுள் சில :-

“எங்க வலிகளையும் பிரச்சனைகளையும் தீர்க்கத்தான் ஜாதி கட்சி எல்லாம் ஆரம்பிச்சாங்கனு நினைச்சோம், ஆனா எங்க வலிகளையும் பிரச்சனைகளையும் வெச்சிதான் கட்சியே நடத்துறாங்கனு பின்னாடிதான் புரிஞ்சிது”

“அடிச்சா வலிக்கும்னு தெரிஞ்சவங்களுக்கு நம்ப வலி எப்படி இருக்கும்னு தெரியாதுல”.

“இந்தி மொழி கத்துக்கிறது ஆர்வம், ஆனா அத கத்துக்கிட்டே ஆகணும்னு சொல்றது ஆணவம்”

சாதிய தாக்குதலுக்கு உள்ளாகும் அங்கன்வாடி பணிப்பெண்ணில் தொடங்கும் படம் அதே பெண் கொடியேற்றத்துடன் முடிகிறது. படம் முடிவடைந்து விட்டதாக நினைத்து மக்கள் வெளியேறும் நிலையில் நாயகன் பேசும் வசனம் மிக முக்கியத்துவம் பெறுகின்றன. “படிக்கும் குழந்தைங்க 2 மொழி படிக்கிறார்களா 3 மொழி படிக்கிறார்களா என்பதை விட அரசியலமைப்பு சட்டத்தைப் படிக்கனும். ஏன்னா, சட்டம் தான் நம் தேசிய மொழி. அது சரியானவங்க கையிலும் இருக்கணும்”.

இந்திய சட்டம் Article 15 – மதம், இனம், சாதி, பிறப்பிடம் தொடர்பான ஏற்றத்தாழ்வை மறுக்கிறது. (அதாவது சமமாக வாழும் உரிமையைத் தருகிறது)

நம்மை நாமே எடைபோட நெஞ்சுக்கு நீதி. ஒவ்வொருவரும் பார்ப்பது சமூகத்திற்கு நலன் பயக்கும். ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian